செய்தி வெளியீடு எண்:529 நாள்: 10.08.2017

# செய்தி வெளியீடு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் "**அம்மா மென்தமிழ் தமிழ்ச் சொல்லாளர்**" மென்பொருள் 16.05.2017 அன்று தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் வெளியிடப்பட்டது. 1பல்வேறு சிறப்புக்கூறுகளைக் கொண்ட இம்மென்பொருள் தமிழ்நாடு அரசின் 2015 ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கணினித் தமிழ் விருதைப் பெற்றுள்ளது. இம்மென்பொருள் கணினியில் ஆங்கில மொழிக்கெனப் பிழை திருத்தி, சொல் திருத்தி வசதிகள் இருப்பதைப்போல் தமிழில் ஒற்றுப்பிழை, சந்தி, மயங்கொலி உள்ளிட்ட இலக்கண பிழைகள் ஏதுமின்றி எழுதத்தக்க வகையிலும், தவறுகளை தானே சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளும் வகையிலும் எழுத்துருக்களை மாற்றிக்கொள்ளும் வசதியுடன் உருவாக்கப்பட்டுள்ளது. இம்மென்பொருள் தொடர்பான செயல் விளக்கக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத்துறை அலுவலர்களுக்கும் 09.08.2017, 10.08.2017 ஆகிய இருநாட்கள் பயிற்சி அளிக்கப்பெற்றது. பேரா. முனைவர் ந. தெய்வசுந்தரம் அவர்கள் மென்பொருளின் பயன்பாடு குறித்த செயல் விளக்கத்தினை செய்துகாட்டினார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு அலுவலர்களிடம் மென்பொருள் பயன்பாடு குறித்தும் மேலும் தேவையான வசதிகள் குறித்தும் கருத்துகளை கேட்டறிந்தார். அம்மா மென்தமிழ் தமிழ்ச் சொல்லாளர் மென்பொருளில் இணைக்க வேண்டி அலுவலர்கள் தெரிவித்த கூடுதல் வசதிகளை ஏற்படுத்தி இணைய வழியில் வழங்குவதற்கு ஆவன செய்வதாகவும் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியின்போது அரசு இணை செயலாளர் திருமதி க.அன்னை, தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் கோ.விசயராகவன், மொழிபெயர்ப்புத் துறை இயக்குநர் முனைவர் ந. அருள், அரசு சார்புச் செயலாளர் திரு. அ. அமரேசன், தமிழ் வளர்ச்சி துணை இயக்குநர் திரு. ம.சி. தியாகராசன் ஆகியோர் உடனிருந்தனர். இந்நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடு பணிகளை தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் திருமதி ப. இராசேசுவரி அவர்கள் மேற்கொண்டார்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**